

நாகை மாவட்டம் நாகை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் நாகை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லாவை ஆதரித்து நாகை மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன் திட்டச்சேரி பேரூர் பகுதியில் பிரச்சாரம் செய்தார் உடன்திட்டச்சேரி பேரூர் செயலாளர் முகமது சுல்தான் மற்றும் கழகத்தினர் கூட்டணி கட்சியினர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டமன்றத் தொகுதி குத்தாலம் கிழக்கு ஒன்றியத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் எம்.முருகன் வாக்கு சேகரித்தார். உடன் குத்தாலம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் மங்கை எம்.சங்கர் மற்றும் கழகத்தினர், கூட்டணி கட்சிகள் உள்ளனர்.



அரியலூர் சட்டமன்ற தொகுதி,திருமானூர் ஒன்றியம், கோக்குடி,வேப்பங்குழி,காணிக்கைபுரம் ஆகிய கிராமத்தில் அரியலூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் லதாபாலு பொதுமக்களைச் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். தோழமை கட்சி நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் தீவிர வாக்கு சேகரித்தனர்.



மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர் சா.செந்தில்நாதன் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி வீடு, வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் மொடக்குறிச்சி ஒன்றிய கழக செயலாளர்கள் மேற்கு சு.குணசேகரன், வா.கதிர்வேல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின், தி.மு.கழக வேட்பாளர் ந.தினேஷ்குமாருக்கு ஆதரவாக அவரது மனைவி ரேகா தினேஷ்குமார் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மகளிர் அணி நிர்வாகிகளுடன் வீடு, வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் வீரபாண்டி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் டாக்டர். ஆ. கா தருண் அவர்களுக்கு சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் இரா. இராஜேந்திரன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் மாநில செயலாளர் முத்தரசன் ஆகியோர். கழக அரசின் சாதனைகளை எடுத்து கூறி மகளிர் களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர் வீரபாண்டி, பனமரத்துப்பட்டி ஒன்றிய பகுதிகளில் உடன் ஒன்றிய செயலாளர். உமாசங்கர் மற்றும் நிர்வாகிகள் இருந்தனர்



சேலம் கிழக்கு மாவட்டம் கெங்கவல்லி சட்ட மன்ற தொகுதி கழக வேட்பாளர் கு. சின்னதுரை ஆதரித்து காட்டுக்கோட்டை , தலைவாசல், சதாசிவபுரம், சிறுவாச்சூர், ஊனத்தூர், உள்ளிட்ட ஊராட்சிகளில் சேலம் மத்திய மாவட்ட செயலாளரும், அமைச்சருமான இரா. ராஜேந்திரன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அப்போது மத்திய ஒன்றிய செயலாளர்கள் சாத்தப்பாடி மணி, பாலமுருகன் உள்ளிட்டோர் உடனிருந்தனர் .



பல்லடம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின், தி.மு.கழக வேட்பாளர், மத்திய மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் ஆண்டிபாளையம் 40 வது வார்டுக்குட்பட்ட பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், பகுதி கழக செயலாளர் பி.முருகசாமி மாமன்ற உறுப்பினர் சுபத்ரா ஆனந்த் உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கோவை வடக்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் காந்திபுரம் பகுதியில் நடை பயணம் மேற்கொள்ளும் பொதுமக்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி,ஆண்டிமடம் மேற்கு ஒன்றியம், குவாகம்,வல்லம் கிராமத்தில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் க.சொ.க.கண்ணன் பொதுமக்களைச் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். உடன் ஒன்றிய கழக பொறுப்பாளர் ஆர்.கலியபெருமாள், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் க.தர்மதுரை,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச.வசந்தபகலவன் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.